பதிவு எண்: ம. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆடி 1 (16—7—68) செவ்வாய் ★ வெளியூர்: ஆடி 2 (17—7—68) புதன் [இதழ்: 27

கா. மு. கதிரவன் பதவியேற்பு

சென்னை, ஜூலை 15—

தென்காசித் தொகுதிச் சட்டமன்ற இடைத் தேர்தலில் வெற்றிபெற்ற கழக உறுப்பினர் கதிரவன், நேற்று சட்டப் பேரவைத் தலைவர் சி. பா. ஆதித்தனார் முன்னிலையில் பதவி உறுதிமொழி ஏற்ருர்; அதுபோது, பொதுப் பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துசாமி, முன்னாள் மேயர் மைனர் மோசஸ், சட்டமன்ற தி. மு. க. செயலாளர் கா. வேழவேந்தன் ஆகியோர் வந்திருந்தனர்.

செய்ய நினைத்திருப்பது அதிகம்!

செய்திருப்பது நூற்றில் ஒரு பங்குகூட இல்லை!

மக்களின் நல்வாழ்வே கழக ஆட்சியின் இலட்சியம்-அதனை ஈடேற்ற ஒத்துழைப்புத் தாரீர்

தென்காசி வெற்றிவிழாக் கூட்டத்தில் அண்ணா வேண்டுகோள்

சென்னை, ஜூலை 16—

" காங்கிரசுக்காரர்கள் தரக்குறைவான பிரச்சாரத்தில் ஈடுபட்டது தென்காசியில் மட்டுமல்ல — சங்கிரியில் மட்டுமல்ல — தென் சென்னையில் மட்டுமல்ல — நமது கழகம் தோன்றிய காலந்தொட்டு இத்தகைய பிரச்சாரத்தில் ஈடுபட்டார்கள்! 'நாம் தரக்குறைவாகப் பேசினால் நாட்டு மக்கள் அவர்களை இழிவாகக் கருதுவார்கள்; அதனால் அழிந்துவிடுவார்கள்' என்ற தப்புக் கணக்கைக் காங்கிரசார் போட்டார்கள்!

" நாம் அவர்களை மதித்தோம் — அவர்கள் நம்மை இகழ்ந்தார்கள்! 'சுதந்தரப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களாயிற்றே' என்று நாம் அவர்களைப் பெருமையாகப் பேசினோம் — அவர்கள் நம்மைக் கால் தூசுக்குச் சமமாகக் கருதினார்கள்! நாம் அவர்களை, 'ஆற்றல் உள்ளவர்கள்' என்றோம் — 'அவர்களோ நம்மை, 'எதற்கும் இலாயக்கற்றவர்கள்' என்றார்கள்! இப்படித் திட்டியதின் பயனாக — தரக்குறைவாகத் தாக்கியதின் காரணமாகத்தான், பொதுத் தேர்தலின்போது, மக்கள் நம்மிடம் ஆட்சியை ஒப்படைத்தார்கள்! தென்காசி இடைத் தேர்தலிலும் அவர்களது தரக்குறைவான பேச்சு அவர்களுக்கே பாதகமாக முடிந்தது!

" இந்த வெற்றியை அளித்த மக்களுக்கு மதிப்பு அளித்து, அவர்கள் வாழ்விலே வளம் பொங்க — மகிழ்ச்சி நிறைந்து விளங்கச் செய்யவேண்டிய அவசியத்தை உணர்த்தியிருக்கிறோம்.

" இந்த 15 மாத காலத்தில் நாம் செய்துள்ள சாதனைகள் அதிகம்தான் என்றாலும், நாம் செய்யவேண்டும் என்று நினைத்திருப்பதில் நூற்றில் ஒரு பங்குகூட இது இல்லை! 'நமது மக்கள் முகத்தில் எல்லாம் மகிழ்ச்சி பொங்கவேண்டும்; இல்லம் எல்லாம் ஒளிமயமாகத் திகழவேண்டும்; தொழில் அமைதி உருவாக வேண்டும்; தொழிலாளர் நலன் பாதுகாக்கப்பட வேண்டும்; செல்வம் பெருக வேண்டும்; அது பலருக்கும் பயன்படத்தக்க வகையில் பரவலாக்கப்பட வேண்டும்; எல்லோருக்கும் வேலை வாய்ப்புக் கிடைக்கவேண்டும்; வேதனைகள் விலக வேண்டும்' என்றெல்லாம் நான் கருதுகிறேன்; இதற்கு இந்த 15 மாத குறுகிய காலம் போதாது — பல ஆண்டுகள் வேண்டும்.

" நாட்டு மக்கள் நல்வாழ்வுக்கு இந்த அரசு எடுக்கின்ற காரியங்களுக்கு நீங்களெல்லாம் நல்ல முறையில் ஒத்துழைப்புக் கொடுத்து உதவ வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன் "

என்று, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் நேற்று சென்னையில் நடந்த தென்காசி வெற்றி விழாப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில், மக்களுக்கு விளக்கமளித்து வேண்டுகோள் விடுத்தார்கள்.

சென்னை மாவட்ட தி. மு. க. சார்பில், தென்காசி வெற்றி விழாவைக் கொண்டாடவும், வெற்றி வீரர் கதிரவனைப் பாராட்டவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கூட்டம், கோடம்பாக்கம் கண்ணுமேஸ்திரி திடலில், துணை மேயர் பவளவண்ணன் தலைமையில் நடைபெற்றது.

பல்லாயிரக்கணக்கான மக்கள், கூட்டத்தில் குழுமியிருந்தனர்.

அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன், ஏ. கோவிந்தசாமி, சத்தியவாணிமுத்து, மா. முத்துசாமி, மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் இராம. அரங்கண்ணல், எம். கோபால், மாநகராட்சி உறுப்பினர் சா. கணேசன், நடிகமணி டி. வி. நாராயணசாமி எம். எல். சி., தோழர் எம். குமார் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

தோழர் கா. மு. கதிரவன், பாராட்டுக்கு நன்றியுரைத்துப் பேசியபின், இறுதியாக அண்ணா அவர்கள் உரையாற்றினார்கள்.

அண்ணா அவர்கள் பேசத் தொடங்கிய சிறிது நேரத்துக்கெல்லாம் மழைத் தூற்றல் போடவே உரையை அத்துடன் முடித்துக் கொண்டார்கள்.

விழாவை முன்னிட்டு கோடம்பாக்கம் இரயில்வே மேம்பாலத்திலிருந்து பவர் அவுஸ் வரை— சுமார் ¾ மைல் தொலைவுக்கு— ஆற்காடுச் சாலையின் இருமருங்கிலும் மின் குழல் விளக்குகளாலும், கொடி தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு விழாக் கோலம் பூண்டிருந்தது.

அண்ணா அவர்கட்கும், வெற்றி வீரர் கதிரவனுக்கும் ஏனைய அமைச்சர்கட்கும் மலர்மாலைகளும் கைத்தறியாடைகளும் ஏராளமாக அணிவிக்கப்பட்டன.

அண்ணா அவர்களும், அமைச்சர் கருணாநிதி அவர்களும் பல குழந்தைகட்குப் பெயர் சூட்டினார்கள்; அதன் நினைவாக தீவிபத்துத் துயர் துடைப்பு நிதிக்கும், கழகத் தேர்தல் நிதிககும் பணம் அளிக்கப்பட்டது.

அண்ணா அவர்கள் தொடர்ந்து பேசியதாவது:—

" காங்கிரசுக்காரர்கள் தென்காசித் தேர்தலிலே முறையற்றவகையில் தேர்தல் பிரச்சாரம் செய்தார்கள் என்பதை, இங்கே எனக்குமுன் பேசியவர்கள் எடுத்துச் சொல்லி, 'அவர்கள் அதை இனிமேலாவது திருத்திக் கொள்ள வேண்டும்' என்று சொன்னார்கள்.

சனநாயகம் என்றாலே, ஆளும் கட்சிக்கும்—எதிர்க் கட்சிக்கும் இடையே போட்டி மனப்பான்மை இருக்கலாமே தவிர, பொச்சரிப்பு மனம் இருத்தல் கூடாது! குறைபாடுகளை எடுத்துக் கூறலாமே தவிர, பகை உணர்ச்சி இருக்கக்கூடாது! இதை அவர்கள் உணர்ந்து நடந்திருந்தால்கூட, இந்தத் தேர்தலில் இத்தகைய பரபரப்பு ஏற்பட்டிருக்காது.

பொதுவாகவே, தேர்தலின் போது என்னைப் பொறுத்தவரையில், இத்தகைய பரபரப்பை விரும்புபவன் அல்ல — வரவேற்பவனுமல்ல!

சனநாயக நாட்டில் மக்கள் தாங்களாகவே உணர்ந்து, எந்தக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டுமோ அதற்கு வாக்களிக்க வேண்டும். 'எந்தக் கட்சியால் மக்களுக்கு அதிகப் பயன் விளையும்' என்று எதிர்பார்க்கிறார்களோ, அதற்கு அவர்கள் வாக்களிப்பார்கள்.

அதைவிடுத்து, தேர்தலின்போது தரக்குறைவான பிரச்சாரமோ, முறையற்ற பேச்சோ, மக்கள் நம்பிக்கையை — நல்லாதரவைப் பெற்றுத் தந்துவிட முடியாது!

ஆனால் காங்கிரசுக்காரர்கள் மிகுந்த அக்கறையுடன், இந்தத் தேர்தலில் ஒரு பரபரப்பை ஏற்

(4-ம் பக்கம்பார்க்க)

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்!

'காமராசர் கல்லூரி'க்கு அண்ணா செய்த திருப்பணி!

சென்னை, ஜூலை 16—

"தென்காசி வெற்றியின் முடிவு, 'எந்த அளவுக்கு மக்கள் நமக்கு ஆதரவு காட்டுகிறார்கள்' என்றவகையில்—இனி நாம் பெற வேண்டிய வெற்றிக்கு ஊக்கம் கொடுக்கும் முறையில்—பெற்ற வெற்றிக்கெல்லாம் கிரீடமாக அமைந்திருக்கிறது! இல்லாததையும் பொல்லாததையும் இட்டுக்கட்டிச் சொன்னால் என்ன பலன் கிடைக்கும் என்பதைக் காங்கிரசார் மூலம் தென்காசி மக்கள் உலகுக்கு உணர்த்தியிருக்கிறார்கள்!

"நம்மிடத்திலிருக்கின்ற வாய்ப்பு-வசதி-அதிகாரங்களை வைத்து எந்தத் தனிப்பட்ட நபருக்கோ, ஜமீன்தாரருக்கோ, பெர்மிட்காரருக்கோ, பஸ் ரூட் முதலாளிகளுக்கோ, ஏற்றுமதி-இறக்குமதி செய்பவர்களுக்கோ — அவர்கள் இலாபம் பெறத்தக்க எந்த முடிவையும் கழக அரசு இதுவரையில் எடுக்கவில்லை!

"நாம் எடுத்த முடிவின் பலன் கிராம மக்களுக்கு—ஏழை எளியவர்களுக்குப் போய்ச் சேர்ந்தது! எனவே, காங்கிரசார் எவ்வளவு இட்டுக்கட்டிப் பேசினாலும்கூட, மக்கள் மன்றத்தின் ஆதரவு நம் பக்கமே இருக்கிறது!

'தூத்துக்குடியில் காமராசர் பெயரில் ஒரு கல்லூரி அமைப்பதற்குத் தூத்துக்குடியிலுள்ள செல்வந்தர்களும், சில காங்கிரசுத் தலைவர்களும் நாலைந்து ஆண்டுகளாகவே முயற்சி செய்துவந்தனர்; இந்திய அரசுக்குச் சொந்தமான ஐம்பது ஏக்கர் நிலத்தைக் கல்லூரி அமைப்பதற்காகக் கேட்டார்கள்; ஏக்கருக்கு ஐயாயிரம் ரூபாய் கணக்கு வைத்து, 'இரண்டரை இலட்சம் ரூபாய் தந்தால் அந்த இடத்தைத் தருகிறோம்' என இந்திய அரசு கூறிவிட்டது!

"அண்ணா அவர்கள் பதவியேற்ற பின், சம்பந்தப்பட்ட 'பைல்'களைப் பார்த்து அதுபற்றி மத்திய அரசுக்கு மீண்டும் எழுதி, 'காமராசர், தமிழ்நாட்டின் புகழ்மிக்க தலைவர்; அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவராக இருந்தவர்; அத்தகைய பெரியவர் ஒருவர் பெயரில் அமையும் கல்லூரிக்கான இடத்தை இந்திய அரசு இனமாகத் தருவதுதான் முறை; இனமாகத் தராவிட்டாலும் குறைந்த வாடகையிலாவது தர வேண்டுமேயல்லாது, அதற்கு விலை கேட்பது எவ்விதத்திலும் நியாயமல்ல—பொருத்தமல்ல' என்று உணர்த்தினார்கள்!

"அதுமட்டுமல்லாமல், டில்லிக்குச் சென்றிருந்தபோது அதுபற்றிப் பேச்சுவார்த்தை நடத்தி, '100 ஆண்டுகளுக்கு ஐம்பது ஏக்கர் நிலத்திற்கு ரூ. 100 வாடகை' என்று—ஆண்டொன்றுக்கு ரூ. 1 வாடகையாக இருக்கும்படி செய்தார்கள். 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண—நன்னயஞ் செய்துவிடல்' என்ற கண்ணியத்தின் அடிப்படையில் அண்ணா அரசு ஆளுகிறது என்பதற்கு இதுவே ஒரு சான்று! இதைப் போன்ற நிகழ்ச்சிகள் இன்னும் பல இருந்தாலும், 'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பதுபோல், மற்ற சோறுகள் தேவையில்லை என்றே இதை மட்டும் கூறுகிறேன்."

—அமைச்சர் இரா. நெடுஞ்செழியன்

(தென்காசி வெற்றி விழாக் கூட்டத்தில்)

நெல் விலையை ஏற்றினால் அரிசி விலை குறையுமா?

பதவியிழந்த காங்கிரசாரின் விசித்திர வாதம்'

பருவமழை தவறியும் விளைவைப் பெருக்கிய சாதனை அறிவீர்!

மாயூரம் -- மணல்மேடு வேளாண்மை மாநாட்டில் அமைச்சர் மு. கருணாநிதி விளக்கவுரை

"பருவமழை இல்லாவிட்டாலும், உணவு உற்பத்தியை அதிகப்படுத்துகின்ற அளவுக்குத் திறம்பட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி செயல்பட்டிருக்கிறது, அது மாத்திரம் அலல; இருபோகச் சாகுபடி முறையைத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய விவசாயத்துறை நீர்வளத்துறை அதிகாரிகள் கலந்துகொண்டும்--விவசாயத்துறை அதிகாரிகளுடைய ஒத்துழைப்போடும் -- தஞ்சை மண்டலத்திலே இருக்கின்ற விவசாயிகளுடைய ஒததுழைப்போடும இரு போகச் சாகுபடியிலே நாம பெரும் வெற்றியினைக் கண்டோம் !

"தஞ்சை மாவட்டத்தில் மட்டும் அதிகப்படியாக இரண்டு இலட்சத்துப் பத்தாயிரம் ஏக்கரில் இருபோகச் சாகுபடி செய்யப்பட்டது.

"சாத்தனூர் நீர்த்தேக்கத்தில் -- காங்கிரசார் காலத்தில் -- செப்டம்பர் மாதம் 15-ந் தேதிதான் தண்ணீரைத் திறப்பார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு செப்டம்பர் மாதம் 15-ந் தேதிவரையில் தண்ணீரைத் தேக்கிவைதது, 'அதை வீணாக்கத் தேவையில்லை; அதை முன்கூட்டியே திறக்கலாம்' என்று பொறியாளர்களோடு கலந்து ஆலோசித்து -- செப்டம்பர் 15-ல் திறந்துவிடப்படும் சாத்தனூர் நீர்ததேக்கத்தினுடைய தண்ணீரை முன்கூட்டி ஜூன் மாதம் 16-ந் தேதியே திறப்பது என்று திட்டமிட்டு -- ஜூன் மாதம் 16-ந் தேதி திறந்த காரணத்தால், வடஆற்காடு மாவட்டத்திலே 3,600 ஏக்கரும், தென்னாற்காடு மாவட்டத்திலே 2,100 ஏக்கரும் புதிதாக மேற்கொண்டு இருபோகச் சாகுபடியில் ஈடுபட்டு நலல பலனைத் தந்தன !

"அதைப் போலவே, தர்மபுரியிலே இருக்கின்ற கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம் முதன்முறையாக இருபோகச் சாகுபடிக்குப் பயன்படுத்தப்பட்டு, ஒன்றல்ல, இரண்டல்ல—10,270 ஏக்கர் இருபோகச் சாகுபடிக்கு தர்மபுரி மாவட்டத்திலே பயன்படுத்தப்பட்டது.

"மதுரை மஞ்சளாறு அணைக்கட்டு மூலம் ஆயிரம் ஏக்கர்—திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரவருணிப் பாசனத் திட்டத்தின்கீழ் ஆயிரம் ஏக்கர்—மூன்றும போகச் சாகுபடி வரையிலே பயன்படுத்தப்படுகின்ற அளவுக்குத் தாமிரவருணிப் பாசனத் திட்டத்தை நாங்கள் அங்கே மாற்றியமைத்துக் கொண்டோம்.

"மொத்தம் சென்ற ஆண்டில் மட்டும் 2 இலட்சத்து 28 ஆயிரம் ஏக்கரில் இருபோகச் சாகுபடி செய்த காரணத்தினாலேதான், 39 நாள்தான் மழை பெய்தது என்றாலும்—பருவ மழை தவறியது என்றாலும்—அதிக உணவு உற்பத்தியைத் தமிழக அரசால் செய்துகாட்ட முடிந்தது.

"அது மாத்திரமல்ல; 1966–67-ல் ஆகாயவிமானம் மூலம் பூச்சிகளைக் கொல்லுகின்ற மருந்தைத தெளிக்க திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு சோதனை நடத்தி அதோடு முடித்துவிட்டார்கள்; ஆனால் தமிழக அரசுப் பொறுப்பைத் திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொண்ட பிறகு, 1966–67-ல் நெல்லை மாவட்டத்திலே சோதனையாக நடைபெற்ற ஆகாய விமானத்தின் மூலம் மருந்து தெளிக்கின்ற அந்த முறை சர்வ சாதாரணமாகப் பல மாவட்டங்களில் இன்று கடைபிடிக்கப்படுகின்றது.

"தென்னாற்காடு மாவடடத்திலே மாத்திரம் ஆகாயவிமானத்தின் மூலம் 10,000 ஏக்கரில் மருந்து தெளிக்கப்பட்டிருக்கிறது; வட ஆற்காடு மாவட்டத்தில் 13,000 ஏக்கரில் தெளிக்கப்பட்டிருக்கிறது, செங்கற்பட்டு மாவட்டத்தில் 13,000 ஏக்கரில் தெளிக்கப்பட்டிருக்கிறது; கோவை மாவட்டத்தில் 45,940 ஏச்கரில் மருந்து தெளிக்கப்பட்டிருக்கிறது; மதுரையில் 22,400 ஏக்கரில் தெளிக்கப்பட்டிருக்கிறது; இராமநாதபுரத்தில் 4,400 ஏக்கரில் தெளிக்கப்பட்டிருக்கிறது; நெல்லை மாவட்டத்தில் 55,400 ஏக்கரில் தெளிக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டிலே மட்டும் 1,64,000 ஏக்கரில் விமானத்தின் மூலம் மருந்து தெளிக்கப்பட்டிருக்கிறது !

"நாங்கள் ஆட்சிக்கு வந்துவிட்ட காரணத்தால் விவசாயிகளுக்கு என்ன கேடு செய்துவிட்டோம்? ஓடிக்கொண்டிருந்த நதிகளையெல்லாம் அடக்கிவிட்டோமா? தெளித்துக் கொண்டிருந்த மருந்தையெல்லாம் நிறுத்திவிட்டு—பூச்சிகளையெல்லாம் உலவவிட்டு—நெற்பயிர்களையெல்லாம் பதராக ஆகும்படி செய்துவிட்டோமா?

"அவர்கள் நல்லது செய்திருந்தால் தொடர்ந்து செய்தோம் ! அவர்கள் அல்லது செய்திருந்தால் அதை நீக்கிவிட்டு நல்லது செய்யத் துணிந்தோம் ! இதுதான் ஓர் ஆட்சி மாற்றத்திலே ஏற்படக்கூடியது !

"ஆனால் காங்கிரசாருக்கு அதைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை ! முடியாத காரணத்தால், மணல்மேட்டிலே மாநாடு கூட்டி, முரண்பட்ட இரண்டு கருத்துக்களைச் சொன்னார்களாம்—'அரிசி விலையைக் குறை; நெல் விலையைக் உயர்த்து' என்று ! என்ன வேடிக்கை இது? 'அரிசி விலையைக் குறை; நெல் விலையை உயர்த்து'—அப்படியானால் மதிப்பு அரிசிக்கா அல்லது அந்த அரிசியிலிருந்து நீங்கிய உமிக்கா?– எனக்குப் புரியவில்லை ! இரண்டையும் கழித்துப் பார்த்தால், 'உமி விலையை ஏற்று; உமிக்கு மதிப்புக் கொடு' என்பதாகும்.

"உமிக்கு மக்கள் மதிப்புக் கொடுக்காத காலமிது ! ஆகவேதான் 1967-ல் ஊதிவிட்டார்கள் ! அதைப் புரிந்துகொள்ளாமல், ஒரு புறத்திலே, 'அரிசிக்கு விலையைக் குறை' என்றும், இன்னொருபுறத்திலே, 'நெல்லுக்கு விலையை ஏற்று' என்றும் கூறுகின்றனர் !

"இன்று மானியம் கொடுக்கப்படுவதன் காரணமாகத் தமிழக அரசு சுமார் 8 அல்லது 9 கோடி ரூபாய் இழப்பிற்கிடையே சென்னை நகரத்திலும், கோவை நகரத்திலும இருககின்ற மக்களுக்கு அரிசி விலையைக் குறைத்து ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுக்கிறதென்றால், நான் கேடகிறேன்--நீங்கள் தூய்மையான உள்ளத்தோடு சிந்தித்துப் பாருங்கள்—மனசசாட்சிக்கு மதிப்பளித்து சிந்தித்துப் பாருங்கள்--ஏறத்தாழ 3 கோடி தமிழ் மக்கள் இருக்கின்ற இந்தத் தமிழகத்தில் உற்பத்தி செய்வோர் எவ்வளவு பேர்--வாங்கிச் சாபபிடுவோர் எவ்வளவு பேர்--அதை எணணிப் பார்க்கவேண்டாமா?

"உற்பத்தி செய்வோர் என்றால், நிலத்திலே வேலை செய்வோர் அல்லர்; அவர்களும் உற்பததி செய்வோர்தான்; ஆனால், உற்பத்தி செய்வோர் எனகிற சொற்றொடருக்குத் தமிழகத்திலே வழங்குகிற இலக்கணம மிராசுதார்; நிலம உடையவர்; அந்த நிலமுடையவர்கள் எத்தனைப்பேர்? அவர்களோ இலட்சக்கணக்கில் வாங்கிச் சாப்பிடுபவர்களோ கோடிக்கணககில் ! இலடசக்கணக்கானவர்கள் பககத்திலே இந்த அரசு இருப்பதா? அவர்களுக்கே சாதகங்கள் செய்வதா? அல்லது, கோடிக்கணக்கானவர்கள் பக்கத்திலே இந்த அரசு இருப்பதா? அவர்களுக்குப் பாதகம் வராமல் பார்ததுக்கொள்வதா—இதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

"கோடிக்கணக்கானவர்களுக்காக இலட்சக்கணக்கானவர்கள் துன்பப்பட வேண்டுமா என்றால், துன்பப்படுகிற நிலையிலே அல்ல -- அவரவருடைய பிரச்சினைகளையும் இந்த அரசு கவனிக்கிறது ! அவர்களுடைய தேவைகளையும இந்த அரசு உணருகிறது ! அவர்கள் விளைவித்தால்தான், வாங்கிச் சாப்பிடுபவர்களுக்கு வாங்கிச் சாபபிட முடியும் என்பதும் புரிகிறது ! ஒருபுறத்திலே அரிசி விலை குறைந்தகாரணத்தால், விலைவாசி அனைததும நமமுடைய நாட்டிலே இன்றையத் தினம் மளமளவென்று சரிந்திருக்கின்ற கதையை நாம் பார்க்கவில்லையா?

"நம்முடைய நாட்டில் விவசாயப் பெருங்குடி மக்கள் உழைக்கத் தயாராக இருக்கிறார்கள். அப்படி உழைக்கத் தயாராக இருப்பவர்களுக்கு உற்சாகமளிக்கக்கூடிய அரசாகத் திராவிட முன்னேற்றக் கழக அரசு இருக்கிறது—அதையும் நீங்கள் புரிந்திருப்பீர்கள் !

"அறிஞர் அண்ணா அவர்கள், ஒரு இடத்திலே குறிப்பிட்டார்கள்—'வேலையில்லாத் திண்டாட்டம, வேலையில்லாத் திண்டாட்டம் என்கிறோம்; உழவர்கள் என்றால் அவர்கள் படிக்காத கூட்டத்தார் அல்லர்; படிக்காத சாதியல்லர்; படித்தவர்களேகூட—பட்டதாரிகளேகூட விவசாயத் தொழிலிலே ஈடுபடவேண்டும்' என்று !

"விவசாயக் கல்லூரி அமைத்திருக்கிறோம்; அந்த விவசாயக் கல்லூரியிலிருந்து வெளிக்கிளம்புகின்ற மாணவர்கள், விவசாயத் துறையிலே அலுவலர்களாக இருக்கிறார்கள்; அலுவலர்களாக ஆனவர்கள்போக மிச்சமுள்ள மாணவர்கள் வேலை கிடைக்காவிடில், அவர்கள் எல்லாம் விவசாயிகளாக மாறி, அந்தந்தக் கிராமத்தில்—அந்தந்தச் சிற்றூரில் இருக்கின்ற மற்ற மக்களுக்கு, 'விரும்பிய சாகுபடியைச செய்வது எப்படி—புது மாதிரியான சாகுபடி செய்வது எப்படி – செட்டாகத் தண்ணீரைப் பயன்படுத்துவது எப்படி' என்பவைகளையெல்லாம் அவர்களுக்கு விளககலாம்.

"ஓர் அரசின் திட்டங்களால் மாத்திரம் --- ஓர் அரசாங்கம் செலவிடுகின்ற பணத்தால் மாத்திரம் -- ஓர் அரசாங்கம் காட்டுகின்ற அக்கறையால் மாத்திரம்—நாட்டினுடைய வேளாண்மைத் துறையிலே நாம் முன்னேற்றம் கண்டுவிட முடியாது !

"இந்தியத் துணைக்கண்டத்தில் பெருந் தொழில்களுக்குத் தரப்பட்ட இடம், வேளாண்மைத் தொழிலுக்குத் தரப்படவில்லை; அது மறுக்க முடியாத உண்மையாகும்; நாம் வருந்தவேண்டிய உண்மையாகும் அது !

"மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் நம்முடைய நாட்டிலே இருந்த பெரியவர்கள் -- இந்தியத் துணைக்கண்டத்துப் பேரரசைப் பரிபாலித்தவர்கள் --- செய்த தவறின் விளைவு இது !

"வெளிநாட்டுக்காரர்கள் இங்கே வந்து, 'வான்முட்டும் கோபுரங்கள் இருக்கின்றனவா? முகில் மண்டலததைக் கிழிக்கின்ற புகை ஓடுகின்ற ஆலைகள் இருக்கின்றனவா? தொழிற்சாலைகள் இருக்கின்றனவா?' எனக் காணவேண்டும் என்பதிலேதான் அவர்கள் தங்களுடைய கவனத்தைச் செலுத்தினார்களே தவிர, அந்தக் கவனத்தை வேளாண்மைத் துறையிலே அவர்கள் செலுத்தத் தவறினார்கள் !"

அமைச்சர்களின் எண்ணிக்கைக்கு உச்சவரம்பு!

'கட்சி மாறிகளை'த் தவிர்க்க வழி

அரசியல் சட்டம் திருத்தப்படலாம்

புதுடில்லி, ஜூலை 16—

இந்தியாவில் அடிக்கடி கட்சி மாறி அரசியலையே நிலையற்றதாகச் செய்துவரும் சூழ்நிலை பற்றி ஆராயக் கூடடப்பட்ட அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம், சில முக்கியமான முடிவுகளை எடுத்திருக்கிறது.

அவைகளில், அமைச்சரவைகளை அமைப்பதில் ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்துவது என்பது முககியமானதாகும்.

இந்த யோசனையின்படி, மத்தியிலோ, மாநிலத்திலோ உள்ள எந்த அமைச்சரவையிலும், தத்தம் சட்டமன்ற கீழ்சபையின் மொத்த உறுப்பினர்களில் 10-சதவிகிதத்திற்குமேல் அமைச்சர்களின் எண்ணிக்கை இருக்கக்கூடாது.

மேல்சபையும் இருக்கக்கூடிய இடமாக இருந்தால், இது, கீழ் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 11-சதவிகிதமாக இருக்கலாம் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளது.

இதற்காக அரசியல் சட்டத்தின் 75, 163-வது விதிகளைத் திருத்தவும் குழு யோசனை தெரிவித்திருக்கிறது.

மத்திய, மாநில அமைச்சரவைகளைக் குறித்து விளக்கமளிக்கும் மேற்படி விதிகள், தற்பொழுது அமைச்சர்களின் எண்ணிக்கை குறித்து எவ்விதக் கட்டுப்பாடும் விதிக்கவில்லை.

இந்த எண்ணிக்கையில் அடங்கும் அமைச்சர்கள், துணை அமைச்சர்கள், இராசாங்க அமைச்சர்கள், பாராளுமன்றச் செயலாளர்கள் ஆகிய அத்தனைப்பேரும் அடங்குவர்.

இந்த முறைப்படிப் பார்க்கப் போனால், தற்பொழுது 53 அமைச்சர்களைக் கொண்டு இயங்கிவரும் மத்திய அமைச்சரவை, இக்கட்டுப்பாட்டுக்குள் அடங்கியே உள்ளது. உண்மையில், தலைமை அமைச்சர் விரும்பினால் இன்னும் நான்குபேர்களைக்கூடச் சேர்த்துக்கொள்ளலாம்.

'பெரியாரின் பாராட்டே எனக்குப் பொன்னாடை'

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

முன்பு பெரியார் காங்கிரசை ஆதரித்தபோது சில காங்கிரசுக்காரர்கள் என்னிடம் அது பற்றிப் பெருமையாகச் சொல்லுவார்கள். அவர்களிடம் நான், பெரியாரது முழு பேச்சையும் கேட்டீர்களா?' என்றுதான் கேட்பேன்.

பெரியார் காங்கிரசைப் பற்றிப் பேசியதைக் காட்டிலும் அம்மேடைகளில் இராமாயணத்தை கண்டித்துப் பேசியதுதான் அதிகம்; அது எந்த இடமானாலும் தம் கருத்தை எடுத்துச் சொல்லத் தயங்கமாட்டார் !

காங்கிரசுக்கு அவர் தந்த ஆதரவு எதன்பாற்பட்டது?

காங்கிரசை அவர் ஆதரித்தது—திருமண வீட்டில் வேண்டாதவன் நுழைந்துவிட்டால் முதலில் தடுத்து நிறுத்துவார்கள்; அதையும் மீறி உள்ளே நுழைபவனை, 'சாப்பிட்டுத் தொலை' என அடித்து உள்ளே விடுவார்கள்—அப்படித்தான் பெரியார் காங்கிரசுக்கு ஆதரவு தந்தார் !

பெரியார் இவ்வளவு தூரம் பிரச்சாரம் செய்துங்கூட, இந்த அளவிற்குத்தான் இக்கருத்து பரவி இருக்கிறது; அவர் கருத்துப் பரவ, நீண்டநாள் அவர் வாழ வேண்டும்."

'வாழ வைத்தவர்களை வாழ்விழக்கச் செய்துவிட்டனர்'

'புதிய சுமை என்றாலும் இரத்தபாசத்தோடு வரவேற்று வாழ்வளிக்கிறோம்'

பர்மா தமிழர்களுக்கு ஏற்பட்ட நிலை -- அமைச்சர் மு. கருணாநிதி பரிவுரை

சென்னை, சூலை 16—

"பர்மாவிலிருந்து தமிழர்கள் வருகிறார்கள் என்றால், அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்பதுதான் தமிழரின் பண்பாடு; ஆனால், இப்போது, 'வெளிநாட்டிலிருந்து தமிழர்கள் வருகிறார்களே' என்று ஏக்கப் பெருமூச்சுடனும், 'வந்துவிட்டார்களே -- எங்கே குடிவைப்பது' என்ற கவலையுடனும் இருக்கிறோம்!

" 'இதைத்தான் எங்களால் செய்ய முடிந்தது; மன்னித்துக் கொள்ளுங்கள்' என்று மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, 'சிறுகக் கட்டிப் பெருக வாழுங்கள்' என்று அறிவுரை கூறவேண்டிய நிலையில்தான் தமிழக அரசு இருக்கிறது"

என்று, பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், பர்மா தமிழர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள திருவள்ளுவர் அச்சகத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் உருக்கத்தோடு குறிப்பிட்டார்.

பர்மா அகதிகட்குக் கடனுதவி அளிக்கும் திட்டத்தின்கீழ் பர்மாவில் அச்சகத் தொழில் நடத்தி அகதிகளாகத் திரும்பிய 25 தமிழர்கட்கு அரசு ஆளுக்கு ரூ. 5,000 வீதம் கடன் வழங்கியது; அத்தொகையை முதலீடாகக் கொண்டு அவர்கள் கூட்டுறவு முறையில் இந்த அச்சகத்தை நிறுவினர்.

சென்னை ஜார்ஜ்டவுனில் இந்த அச்சகம் நிறுவப்பட்டுள்ளது.

அச்சகத் தலைவர் திரு. அந்தோணி அனைவரையும் வரவேற்றார்.

லயோலாக் கல்லூரிப் பேராசிரியர் திரு. அருளானந்தம் திருவள்ளுவர் படத்தைத் திறந்து வைத்தார்.

சட்டமன்ற மேலவை உறுப்பினர் திரு. க. அறிவழகன் கூட்டுறவுச் சங்கக் கொடியை ஏற்றி வைத்தார்.

விழாவுக்கு, செய்தித் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து தலைமைவகித்தார்.

அமைச்சர் கருணாநிதி அவர்கள் மேலும் பேசியதாவது:—

"இங்கு இருக்கும் எத்தனையோ சுமைகளில் வெளிநாட்டில் இருந்துவரும் தமிழர்கள் பெரும் சுமையாக இருக்கிறார்கள்; இருந்தாலும், 'தமிழர்களுக்கு உதவ வேண்டும்' என்ற இரத்த பாசம் உடையவர்கள் ஆட்சியில் இருக்கிறார்கள்.

ஆட்சியில் இருப்பவர்களோடு நீங்கள் இரண்டறக் கலந்துவிட்டவர்கள்; அதை மறந்துவிட வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசின் அகதிகள் நலத் துணையமைச்சர் டி. ஆர். சவான், பர்மா தமிழர்கள் விஷயத்தில் அண்ணா எடுத்துக்கொள்ளும் முயற்சியை மிகவும் பாராட்டியுள்ளார். பாராட்டுகளாலும், புகழுரைகளாலும் தீர்ந்துவிடுவது அல்ல—இந்தப் பிரச்சினை; இலங்கை, பர்மா தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிக்க நீண்ட காலம் ஆகும்.

'பர்மா தமிழர்கள்' என்று உங்களை இங்கு பேசியவர்கள் குறிப்பிட்டார்கள்; அது தவறு; நீங்கள், 'பர்மாவில் வாழ்ந்த தமிழர்கள்—பர்மாவை வாழவைத்த தமிழர்கள்'—ஆனால், உங்களை பர்மா அரசாங்கம், கழிக்கப்பட்ட அச்சு எழுத்துக்களைப் போல தூக்கி வெளியே எறிந்து விட்டது.

கழிக்கப்பட்ட அச்சு எழுத்துக்களை மீண்டும் உருக்கி, புதிய எழுத்துக்களை உருவாக்குவது போல், தூக்கி எறியப்பட்ட உங்களைப் புது மனிதர்களாக மாற்றத் தமிழக அரசு பாடுபட்டு வருகிறது. 'குப்பையில் வீசப்பட்டாலும், குண்டுமணி குண்டுமணி'தான்' என்பதை மெய்ப்பித்துக் காட்டவேண்டும். குறிப்பாக பர்மா அரசாங்கத்திடம், 'பார்த்தீர்களா? அன்று நீங்கள் எங்களைத் துரத்தினீர்கள்; நாங்கள் இப்போது எப்படி மகிழ்வுடன் வாழ்கிறோம், பாருங்கள்' என்று கூறத்தக்க வகையில் வாழ்ந்து காட்ட வேண்டும்!

முற்றும் துறந்த முனிவர்கள்கூட—காடுகளில் தவம் செய்யும் போது — கூட்டாகச் சேர்ந்து 'யாகம்' நடத்தி, ஆண்டவனிடம் வரம் கேட்பதாகத்தான் புராணங்கள் கூறுகின்றன.

அவர்களுக்கே கூட்டுறவு தேவைப்பட்டுள்ளது என்றால், மனிதர்களுக்கும் கூட்டுறவு எவ்வளவு முக்கியம் என்பது நான் சொல்லாமலேயே உங்களுக்கு விளங்கும். கூட்டுறவுத்துறை நியாயமாகவும், ஒழுங்காகவும் நடந்தால், அது மற்ற துறைக்கு வழிகாட்டியாக விளங்கும். எனவே, இந்தக் கூட்டுறவு அச்சகத்தை அப்படி திறமையுடன் நடத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்."

சத்தியவாணிமுத்து

அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் பேசியதாவது:—

"அரசாங்கம், பர்மா தமிழர்களுக்குப் பல உதவிகளைச் செய்துவந்தபோதிலும், பர்மாவில் வாழ்ந்த செல்வச் செழிப்பான வாழ்வை அவர்களுக்கு நம்மால் கொடுக்க முடியவில்லை!

பர்மாவிலிருந்து கண்ணீரும் கம்பலையுமாகத் திருப்பிய பர்மாத் தமிழர்கள், 'இருக்க இடம் இல்லையே; உயிர் பிழைக்க வழி இல்லையே' என்று இன்னும் ஏங்கிக்கொண்டு இருக்கிறார்கள்; என்னிடம்கூடப் பல பர்மாத் தமிழர்கள் இதுபற்றி முறையிட்டார்கள்.

தமிழக அரசு, பர்மா தமிழர்களுக்குத் தன்னால் முடிந்த எல்லா உதவிகளையும் செய்யும். பர்மா தமிழர்கள் பல்வேறு தொழில்களையும்செய்ய முன்வர வேண்டும்.

குறிப்பாக, பர்மாத் தமிழர்களில் உள்ள பெண்கள் கூட்டாகச் சேர்ந்து பண்டகசாலை அமைத்தால், அதற்கு அரசு தன்னால் இயன்ற உதவியைச் செய்யும்.

அந்தப் பண்டகசாலையைப் பெண்களே நடத்துவதன் மூலமும், அங்கு தையல் இயந்திரங்கள் வைத்துத் தொழில் நடத்துவதன் மூலமும் பெண்கள் ஓரளவு வருமானத்தைத் தேட முடியும். அரசாங்க இலாகாவில் காலியான இடங்களுக்கு ஆள் எடுக்கும் போது, உங்களுக்கு முதலிடம் கொடுப்பது பற்றிப் பரிசீலனை செய்கிறோம்."

சீனாவில் புரட்சி நாகர்கள்

3,000 பேர் வரையில் இருப்பதாகத் தகவல்

கோகிமா, சூலை 15 —

தற்போது சீனாவில் புரட்சி நாகர்கள் குறைந்தது 3,000 பேர்களாவது போர்ப் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்க வேண்டும் என்று நம்பகமாகத் தெரிய வருகிறது.

1,000 முதல் 1,500 பேர் வரை அங்கு இருக்கவேண்டும் என்று அண்மையில் மதிப்பிடப்பட்டது; 'இந்த எண்ணிக்கை மிகவும் குறைவானது' என்று, நன்கு விவரமறிந்த வட்டாரம் கூறுகிறது.

நாகர்களின் பெடரல் அரசாங்கம், பயிற்சி பெற்றவர்களையும் பயிற்சி பெறுதவர்களையும் சம அளவில் அங்கு அனுப்பி வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

பயிற்சி பெறுதவர்கள் சீனாவிலேயே நீண்டநாள் தங்கியிருப்பர் என்றும், பயிற்சி பெற்றவர்கள், அடுத்த வறட்சிப் பருவம் துவங்கும் அக்டோபர் மாதத்தில் அங்கிருந்து புறப்பட்டுவிடுவர் என்றும் தெரிகிறது.

தொழிலாளர் தகராறுகட்குப் பேச்சுவார்த்தையே பரிகாரம்

கண்டிப்புக் காட்டுவதால் பிரச்சினை பெரும் சிக்கலாகும்

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் கருத்து

சென்னை, சூலை 14—

"தற்போதுள்ள சனநாயக அமைப்பில் பேச்சுவார்த்தை, விவாதங்கள்மூலமே தொழிலாளர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும்; தொழிலாளர்கள் தொடர்பான பிரச்சினைகளில் மிக உறுதியான கண்டிப்புக் காட்டினால் பிரச்சினை மேலும் சிக்கலாகும்"

என்று, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. சி. ஏ. இராமகிருஷ்ணன் தெரிவித்தார்.

சென்னைப் பல்கலைக் கழக மண்டபத்தில், அனைத்திந்திய மட்பாண்டங்கள் தயாரிப்பாளர் சங்க 20-வது பேரவைக் கூட்டத்தைத் துவக்கிவைத்து அவர் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:—

"தொழிலாளர் பிரச்சினையில் அரசு கண்டிப்புக் காட்டுவதற்கு வரம்பு உண்டு. தொழில் தகராறில் கண்டிப்புக் காட்டினால், பரிகாரம் ஏற்படுவதற்குப் பதிலாக பிரச்சினை மேலும் சிக்கலைத்தான் ஏற்படுத்தும்.

"இந்தியா ஒரு சனநாயக நாடு. கோடிக்கணக்கானவர்கள் வாக்குரிமை பெற்றிருக்கின்றனர். இந்த அரசியலமைப்பு உள்ள வரையில், இம்முறையில் எந்த மாறுதலுக்கும் வாய்ப்பில்லை.

"பேச்சுவார்த்தை, விவாதங்கள் நடத்திப் பரிகாரம் காணும் முறையே சிறந்த கொள்கையாக இருக்கமுடியும் என்பது என் கருத்து.

"அரசு வன்முறையைப் பயன்படுத்தினால் விளைவுகள் இன்னும் வருந்தத்தக்கதாக இருக்கும்."

நகராட்சி ஊழியர்கட்கு மேலும் வசதி

அமைச்சர்முத்துசாமி அறிவிப்பு

காலம் வரும் வரையில் பொறுத்திருக்க வேண்டுகோள்

காஞ்சிபுரம், சூலை 14—

"நகராட்சிமன்ற ஊழியர்கட்கு மேலும் பல வசதிகளைச் செய்து கொடுக்க அரசு திட்டமிட்டிருக்கிறது; காலம் வரும் வரையில் அவர்கள் பொறுத்திருக்க வேண்டும்"

என்று உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள், நகராட்சி ஊழியர்களிடையே பேசுகையில் தெரிவித்தார்.

காஞ்சியில் நடந்த நகராட்சி உயர்நிலை அலுவலர் மாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசுகையில் மேலும் அவர் கூறியதாவது:—

"நகராட்சி ஊழியர்கள் உரிமைகளைக் கேட்கும்போது நமது கடமையை மறக்கலாகாது. கடமைகளைச் சரிவரச் செய்தால் உரிமைகள் தாமாகவே கிடைக்கும்.

அரசாங்கம் நகராட்சி ஊழியர்களுக்கு எந்தவிதமான உதவிகளையும் செய்யும்.

அரசாங்கத்துக்குத் தொடர்ச் சங்கிலிபோல் ஊராட்சிகள் அமைந்துள்ளன; அவை சரிவர இயங்கினால்தான் அரசாங்கமும் நன்கு இயங்கும்.

வரி வசூல் செய்வதில் சுமுகமான முறையைக் கடைபிடிக்க வேண்டும்.

நகராட்சிகளுக்குக் கிடைக்கும் வருமானத்தில் பெரும் பகுதி நகராட்சி ஊழியர்களுக்கான ஊதியத்துக்குச் செலவிட்டபோதிலும், இன்னும் பல வசதிகளை நகராட்சி ஊழியர்களுக்குச் செய்துதர திட்டமிட்டிருக்கிறோம்; காலம் வரும் வரையில் பொறுத்திருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்."

'பெரியாரின் பாராட்டே எனக்கு நிலையான பொன்னாடை'

'அவருக்கும் எனக்குமுள்ள அன்பு உறுதியானது'

அரூரில் பெரியார் பிறந்த நாள் விழா--அறிஞர் அண்ணா உரை

அரூரில் நடந்த பெரியார் பிறந்த நாள் விழாவில் அறிஞர் அண்ணா அவர்கள், தமக்குப் பெரியார் பொன்னாடை போர்த்தி வாழ்த்தியமைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்த விழாவில் கலந்துகொண்டமைக்காக நான் மெத்த மகிழ்ச்சியடைகிறேன்.

"பெரியார் அவர்கள் எனக்குப் பொன்னாடை அணிவித்தார்கள்.

"ஆட்சியைப் பாராட்டி அவர் சொல்லும் ஒவ்வொரு பாராட்டுரையையும் நிலையானபொன்னாடையாக நான் மதிக்கிறேன்.

"பெரியார் சுயமரியாதைக் கருத்துக்களை உறுதியுடன் பரப்பினார். முப்பதாண்டுக் காலத்துக்கு முன் நடந்த ஒரு நிகழ்ச்சி இன்னமும் என் மனத்தில் அப்படியே தங்கியிருக்கிறது; ஒருமுறை எதிர்ப்புக்களுக்கிடையே நடந்த ஒரு பிரச்சாரக் கூட்டத்தில் ஒருவர் கையில் முட்டை வைத்திருந்தார்; அதில் சாம்பல் நிறைந்திருந்தது; பெரியாரை அவமானப்படுத்த—அவர் பேசிக்கொண்டிருக்கும்போது, —காற்றில் சாம்பலைத் தூவ, அது தொடர்ந்து பெரியார் மீது படிந்துகொண்டிருந்தது.

பெரியார்கொஞ்சமும் கோபப்படவில்லை!

"பின்னர் அவர் பேசுகையில், அச்செய்கையைக் குறிப்பிட்டு, 'இப்படிச் சாம்பலைப் பத்தாண்டுக் காலத்துக்குமுன் என் தாடி நரைக்காதபோது தூவியிருந்தால் கோபப்பட்டிருப்பேன்; இப்போது என் வெண்தாடியில் சாம்பல் படுவதால் மேலும் வெள்ளைதான் ஆகப்போகிறது' என்றார்.

இவ்வாறு எந்த எதிர்ப்புக்கும் கவலைப்படாமல், சுயமரியாதைக் கருத்துக்களைப் பரப்பினார்.

எனக்கும் பெரியாருக்கும் இருக்கும் அன்பு மிக உறுதியானது! என் ஜாதகம் அவர் கையிலும் அவர் ஜாதகம் என் கையிலும் இருக்கிறது!

நான் பெரியாருடன் இருந்த போது, இரவு வெகு நேரம் படித்துவிட்டு உறங்கி காலையில் வெகு நேரம் கழித்து எழுந்திருக்கும் என்னைப் பெரியார் பிரியமுடன் அழைத்து காலையில் விழித்தெழுமாறு கூறுவார்.

எனக்கு முதன்முதலில் ஈரோடு நகரமன்றம்தான் வரவேற்பு அளித்தது; அதைப் பார்த்த பிறகு காஞ்சீபுரம் தந்திருக்கலாம்.

ஈரோடு நகரமன்றம் தந்த வரவேற்பு விழா ஊர்வலத்தில், காரில் என்னை அமர்த்தி 'நான் நடந்தே வருவேன்' என்று கூறி பெரியார் நடந்தே வந்தார்!

அதைக்குறிப்பிட்டு நான் பேசுகையில், பெரியார் நடந்துவர நான்—காரில் அமர்ந்திருந்தது, முள் மெத்தையில் அமர்ந்திருப்பது போல் இருந்தது, எனச் சுட்டிக் காட்டினேன்.

இந்த இரவு நேரத்தில் இவ்வளவு பெருந்திரளாகக் கூடியிருக்கிறீர்கள். 25 ஆண்டுகளுக்குமுன் இப்படி ஒரு கூட்டம் என்றால் அது காலட்சேபம் கேட்கக் கூடிய கூட்டமாகத்தான் இருக்கும்.

வல்லமை மிக்கவர் அவர்!

அந்தக் காலத்தில், ஒரு கிராமத்தில் காங்கிரசுக் கூட்டம் போட விரும்பினால் முதலில் பெரியாரைக் கூட்டம் போடச் சொல்லிக் கேட்டுக் கொள்வார்கள். அந்த அளவிற்கு மக்களை அரசியல் விழிப்படையச் செய்யும் வல்லமை பெற்றவர் பெரியார்!

(2-ம் பக்கம் பார்க்க)

டில்லி மாநகரில் திருவள்ளுவர் சிலை

க. இராசாராம் வேண்டுகோள்

புதுடில்லி, சூலை 14—

நாடாளுமன்ற தி. மு. க. உறுப்பினரும் புதுடில்லி வள்ளுவர் கலை மன்றத் தலைவருமான திரு. க. இராசாராம் அவர்கள் விடுக்கும் வேண்டுகோள் வருமாறு :—

நாடாளுமன்றத்தில் கடந்த ஆறு ஆண்டுக்காலமாகப் பணி புரிந்துவரும் நான், இன்று தமிழக மக்களாகிய உங்களிடம் ஒரு வேண்டுகோளுடன் வருகின்றேன்.

இந்தியத் தலைநகரான டெல்லியில், 'வள்ளுவர் கலை மன்றம்' என்ற ஒரு மன்றத்தினை, 'நார்த் அவின்யூ'வில் வாழும் தமிழ் அன்பர்களின் ஆதரவுடன் துவக்கியுள்ளோம்.

டெல்லி இந்தியாவின் தலைநகர்; அங்கு பல மொழியினரும், பல கலாச்சாரத்தினரும், பல நாகரிகம் கொண்ட மக்களும் வாழ்கின்றார்கள்.

நீண்ட நெடுங்காலமாகவே டெல்லியில் தமிழர்களின் பெயரால் ஒரு தெரு கூட இல்லை என்பதை நாமனைவரும் அறிவோம்.

தமிழ்—தமிழர்—தமிழர் பண்பாடு—தமிழர் கலாச்சாரம் — தமிழர் நாகரிகம் முதலியவற்றை உலகெல்லாம் அறியும்வண்ணம், தமிழக அரசு உலகத் தமிழ் மாநாட்டை சென்னையில் நடத்திச் சிறப்பித்தது.

உலகெலாம் உணர்ந்துவரும் தமிழின் பெருமையை, இந்தியாவின் உள்ளேயே வடக்கில் பலர் அறியாமல் இருக்கின்றனர்; இது உண்மை.

ஆகவே, 'வள்ளுவர் கலை மன்றம்' தற்போது சிறிய அளவில், தமிழிசை—நடனம்— வீணை முதலியவற்றில் வகுப்புக்களைத் தொடங்கி நடத்தி வருகிறது.

டெல்லியில் பல வெளிநாட்டுத் தூதுவரகங்கள் உள; அவற்றில் உள்ள பலர் தமிழைக்கற்கமுன் வந்துள்ளனர். அதற்கான மாலை நேர வகுப்புகளை நடத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

'தமிழன் என்றோர் இனமுண்டு; தனியே அவர்க்கோர் குணமுண்டு' என்றார் நாமக்கல் கவிஞர் அவர்கள்.

'தமிழினத்தின் பெருமையை டெல்லியில் நிலைநாட்ட வேண்டும்' என்ற நெடுங்கால அவாவை நிறைவு செய்யும் வகையில், எங்களுக்கு ஓர் எண்ணம் தோன்றிற்று. அதுதான், இந்தியத் தலைநகரில் தமிழின் பெருமையை உலகெல்லாம் எடுத்தோதிய—தமிழ் மண்ணுக்குப் புகழ்மணம் சேர்த்த—உலகுக்குப் பொதுமறை தந்த— 'வள்ளுவரது சிலையை' டெல்லியில் நிறுவுவது என்ற எண்ணம்.

வள்ளுவர் குறளை வையகமெல்லாம் வாரி இறைக்க வேண்டியது தமிழர்களின் தலையாய கடமை.

இதில் அரசியலோ, சமுதாயமோ, சாதியோ, மற்ற பேதங்களோ குறுக்கிடாது !

டெல்லியில் வள்ளுவருக்குச் சிலை வைக்கும் பெரும் பணியில் தமிழர்கள் அனைவரும் பங்கு கொள்ள வேண்டும் என்று விழைகிறேன்.

'நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர் ! நிதி குறைந்தவர் காசுகள் தாரீர் !' என்ற பாரதியாரின் பாடலை உங்கள்முன் வைக்கிறேன்.

சிலை நிதிக்கு மூதற் காணிக்கையாக வள்ளுவர் கலை மன்றம் ரூ. 1,000 அளித்துத் தொடங்குகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவிரிக் கரையின் தென்பாங்கு, கங்கைக் கரையில் எதிரொலிக்கக் கூவி அழைக்கிறேன். வள்ளல் வழி வந்தோரே ! வெள்ளிக் காசுகளை அள்ளி வழங்குவீர் !

நன்கொடைகளை அனுப்பவேண்டிய முகவரி :—

க. இராசாராம் எம்.பி.,
('வள்ளுவர் சிலை நிதி'),
1/142, மவுண்ட் ரோடு,
சென்னை-6.

'பானை கட்டி'களுக்குப் பெரியார் சூடு!

திருவாரூர், சூலை 16

" கலகம் செய்தே பதவிக்கு வந்த காங்கிரசுக்காரர்கள், இன்று பதவி பறிபோனதும் வெறி பிடித்து அலைகிறார்கள் !

" கறுப்புக்கொடி காட்டுவதாகக் கூறி, கலகம் உண்டுபண்ணுகிறார்கள் !

" காங்கிரசுக்காரர்களின் இந்தப் பூச்சாண்டிகளுக்குத் தி. மு. கழக அரசு பயந்துவிடாது !

" தி. மு. கழக அரசை மனப்பூர்வமாக ஆதரிக்கும் மக்கள் தென்காசி இடைத் தேர்தலில் வண்டை நசுக்குவதுபோல் காங்கிரசைச் சாகடித்து விட்டார்கள் — இன்னுமா காங்கிரசு உயிரோடு இருக்கிறது !

" டெல்லியிடம் போய், 'தமிழக அரசின் படி அரிசித் திட்டத்துக்கு உதவி செய்யாதே' என்று சொல்லிவிட்டு, இங்கு வந்து பானையைக் காட்டிப் படி அரிசி கேட்கிறார்கள் ! இப்படிக் கேட்பதற்கு அவர்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது ?"

—(திருவாரூர் தி.க. பொதுக் கூட்டத்தில்)

கழக ஆட்சி பற்றி இந்தி நடிகர்

சென்னை, சூலை 16—

" வெளி மாநிலங்களில் இருந்து இங்கே வருபவர்களை தமிழக அரசு அரவணைத்துக்கொள்வதுடன், அவர்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் கொடுத்து வருகிறது ! தி. மு. கழகமும், ஆட்சியிலுள்ள அதன் அமைச்சர்களும், தமிழகத்தை மிக நல்ல முறையில் ஆட்சிசெய்து வருகிறார்கள் !

" 'வட நாட்டினர்' என்ற வெறுப்பு உணர்ச்சி இல்லாமல் — அவர்கள் உரிமையுடன் தொழில் நடத்துவதற்குத் தி.மு.கழக அரசு உதவுகிறது !

" அமைச்சர்கள் என்றால், 'ஏதோ தேய்வப் பிறவிகள்; அவர்களை பார்க்கவே முடியாது' என்ற நிலைமை இல்லாமல், தமிழக அமைச்சர்கள் மக்களுடன் நெருங்கிப் பழகுவதை நான் வரவேற்கிறேன்.

" மக்களுடன் மக்களாகத் தமிழக அமைச்சர்கள் பழகுவதால், அவர்களை மக்கள் நேசிக்கிறார்கள் ! அவர்களது வெற்றிக்கு இதுவே அடித்தளமாக இருக்கிறது !

—திலீப் குமார்

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

17--7--68

சென்னை 92-வது வட்டம்

பேராசிரியர் அன்பழகன் படிப்பகச் சார்பில் வெளிநாடு செல்லும் அமைச்சர் முத்துசாமிக்கு வழியனுப்பு விழா; மாலை 7-மணிக்கு கோடம்பாக்கம் இரங்கராசபுரம் சாலையில்; தலைவர்: சா. கணேசன் எம்.சி.; பேசுவோர் : அமைச்சர் கே. ஏ. மதியழகன், ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., ஏ. எஸ். இராமன் எம்.சி., மா. செங்குட்டுவன், மற்றும் பலர்.

சென்னை 2-வது வட்டம்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு புதுமனைக்குப்பத்தில்; தலைவர் : துரைராஜ்; பேசுவோர் : அமைச்சர் சாதிக் பாட்சா, மு. வேதாசலம் எம். எல் ஏ., திப்புசுல்தான், நாகராசன் எம்.சி., சே. அரசு.

ஆலந்தூர் நகர வார்டு கிளைகளின் மறு தேர்தல்

ஆலந்தூர் நகரத்தின் 13, 14, 17, 18 ஆகிய நான்கு வார்டுகள் உட்கிளைகளுக்கான தேர்தல்கள் 21-7-68 ஞாயிறு காலை 10-மணிக்கு தலைமைக் கழகச் சார்பான ஆணையாளர் தோழர் கே. கோவிந்தசாமி எம்.சி. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

இடங்களின் விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

திருப்பூர் நகர 18-வதுவார்டு கிளை மறு தேர்தல்

திருப்பூர் நகர உட்கிளை (வார்டுகளை)கள் தேர்தல் சிலவற்றைப் பற்றி எழுப்பப்பட்ட ஆட்சேபனைகள் குறித்து நேரில் விசாரணை நடத்திய தலைமைக் கழகப் பிரதிநிதி தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ. அவர்கள் அறிக்கைக்கேற்ப,

திருப்பூர் நகர 18-வது (பழைய 10-வது) வார்டு உட்கிளையின் செயலாளர், பொருளாளர் ஆகிய இரு பொறுப்புகளுக்கு மட்டும், 17-7-68 காலை 10-மணிக்கு தலைமைக் கழகச் சார்பான ஆணையாளர் தோழர் கோ. செங்குட்டுவன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

கலவை, கலசப்பாக்கம் தி. மு. க. கிளைகளின் மறு தேர்தல்

வ. ஆ. மாவட்டம் கலவை, கலசப்பாக்கம் கிளைகளின் மறு தேர்தல், ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருப்பதற்கேற்ப 17—7—68 அன்று கலவைத் தி. மு. க. தேர்தல் காலை 10-மணிக்கும்; கலசபாக்கம் கிளைத் தேர்தல் மாலை 4-மணிக்கும் மாவட்டச் செயலாளர் சார்பான ஆணையாளர் தோழர் எம். எஸ். இராதாகிருஷ்ணன் (செங்கம் வட்டச் செயலாளர்) அவர்கள் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

உடுமலை நகர தி.மு.க. கிளை

அவைத் தலைவர், வட்டப் பிரதிநிதி மறு தேர்தல்

கோவை மாவட்டம் உடுமலைப் பேட்டை நகரக் கிளையின் அவைத் தலைவர், மேலமைப்புப் பிரதிநிதி ஆகிய இரு பொறுப்புகளுக்கான மறு தேர்தல், 22—7—68 காலை 10-மணிக்கு தலைமைக் கழக ஆணையாளரின் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

நெல்லை மாவட்ட வட்டக் கழகத் தேர்தல்

" வரும் ஆகஸ்டுத் திங்கள் 3, 4-ம் நாட்களில் நடைபெறும் வட்டக் கழகத் தேர்தலில் எந்த ஒரு பொறுப்புக்கும் போட்டியிட விரும்பும் தோழர்கள், என்னிடம் தலைமைக் கழக வேட்பாளர் பாரம் வாங்கி நிறைவு செய்து, 24-7-68-ம் நாளுக்குள் தலைமைக் கழகத்துக்கு அனுப்பிவைக்கும்படிக் கேட்டுக் கொள்ளுகிறேன் "

என்று நெல்லை மாவட்ட தி. மு. க. செயலாளர் எம். எஸ். சிவசாமி அறிவிக்கிறார்.

அரக்கோணம் நகர தி. மு. க. தேர்தல்

" 17-7-68 அன்று நடைபெற விருந்த அரக்கோணம் நகரக் கிளைத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்று தலைமைக் சழகத்தைக் கேட்டு அனுமதி பெற்று, அகற்கேற்ப ஒத்தி வைக்கப்படுகிறது.

" தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்சப்படும்.

என்று வ. ஆ. மாவட்டச் செயலாளர் இரா. தருமலிங்கம் அறிவிக்கிறார்.

அண்ணா பேச்சு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தினார்கள்; 'அகில இந்தியாவும் எதிர்நோக்கியிருக்கிற தேர்தல்' என்றார்கள் !

'இடைத் தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும், நாட்டில் பெரிய மாறுதல் ஏதும் ஏற்பட்டுவிடாது' என்று தேர்தல் முடிந்து கூறுபவர்கள், தேர்தலுக்கு முன்பே--அட்டவணை துவங்கும் முன்பே அதைக கூறியிருந்தால், இத்தகைய தேர்தல் பரபரப்பு ஏற்பட்டிருக்காது !

பத்திரிகைக்காரர்களும்கூட 'காங்கிரசுக்கும் கழகத்திற்கும் நடக்கின்ற பலப் பரீட்சை' என்று எழுதினார்கள். பத்திரிகைகாரர்கள்மீது குறை கூறியும் பயனில்லை; ஏனென்றால், காங்கிரசு நண்பர்கள் பொதுக்கூட்ட மேடையிலும், அறிக்கைகள் மூலமும் அறைகூவல்களை விடுத்து, சாதாரணமாக முடியக்கூடிய தேர்தலில் பரபரப்புக காட்டிப் பத்திரிகைக் காரர்களை அவ்வாறு எழுதச் செய்துவிட்டார்கள் !

அப்படி அவர்கள் அங்கே பிரச்சாரம் செய்து பெரிதுபடுத்தினார்கள். நான் தேர்தல் பிரச்சாரத்துக்காகக் கடைசி வாரத்தில் தென்காசி போனேன். சென்றதும் அங்கு பணியாற்றிக்கொண்டிருந்த தோழர்களைப் பார்த்து — குறிப்பாக கருணாநிதியைப் பார்த்து, 'எப்படி உள்ளது' என்றேன்; 'காங்கிரசுக்காரர்கள் தரக் குறைவான பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்' என்று சொன்னார்; நான் மெத்த மகிழ்ச்சியோடு, 'வெற்றி நம் பக்கம்தான்' என்று உறுதியோடு கூறினேன்."

நெல்லை மாவட்ட தி. மு. க. கிளைகளின் மறு தேர்தல்

நெல்லை மாவட்டத்தின் கீழ்க் காணும் 12 கிளைகளிலிருந்து இரண்டிரண்டு தேர்தல் முடிவுகள் அனுப்பப்பட்டிருப்பதையொட்டி அந்தந்தக் கிளைகளின் மொத்த உறுப்பினர்களையும் முறைப்படி அறிவித்துக் கூட்டி, 21-7-68 காலை 10-மணிக்கு அந்தந்தக் கிளைகளின் தேர்தல்களை நெல்லை மாவட்டச் செயலாளரின் சார்பாக அனுப்பிவைக்கப்படும் ஆணையாளர்கள் நடத்திவைப்பர்.

நெல்லை வட்டம்

1. சத்தமல்லி
2. நெல்லை நகர 3-வது வார்டு கிளை

கோவில்பட்டி வட்டம்

1. இலுப்பையூரணி

சங்கரன்கோவில் வட்டம்

1. வாசுதேவநல்லூர்

திருவைகுண்டம் வட்டம்

1. ஏரல்
2. அகரம்

தென்காசி வட்டம்

1. குற்றாலம்

நாங்குனேரி வட்டம்

1. சேவந்தியாபுரம்
2. தெற்கு விசயநாராயணம்
3. பிரியம்மாள்புரம்
4. ஆண்டான்குளம்

திருச்செந்தூர் வட்டம்

1. ஆத்தூர்

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

வ. ஆ. மாவட்ட சேவூர் தி. மு. க. கிளை

மறு தேர்தல்

ஏற்கனவே அறிவித்ததையொட்டி வ. ஆ. மாவட்டம் ஆரணி வட்டம் சேவூர் தி. மு. க. கிளையின் மறு தேர்தல், முறைப்படி 21-7-68 காலை 10-மணிக்கு ஆரணி வட்டச் செயலாளரால் அனுப்பப்படும் ஆணையாளரின் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

கல்வி -- தொழில் அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

சூலை 17: மாலை 3-30 மணி: சேலம்—அரசினர் கைத்தறி உறுப்புகள் தயாரிக்கும் தொழிற்சாலை பார்வையிடல்; 4-30 மணி: இந்திய அரசு கைத்தறி நுண்கலைப் பயிற்சிக் கூடம் பார்வையிடல்; 5-30 மணி: கூட்டுறவுத் தொழிற் பேட்டைக்கு அடிக்கல் நாட்டல்; 6-30 மணி: சூரமங்கலம்—பொதுக்கூட்டம்; இரவு 8-30 மணி: அரிசிப் பாளையம்—பொதுக்கூட்டம்.

சூலை 18: காலை 9-மணி: பக்கநாடு—மேல்நிலை குடிநீர்த் தொட்டி திறப்பு விழா; 10-30 மணி: அடுவாப்பட்டி—துவக்கப் பள்ளிப் புதிய கட்டிடத் திறப்பு விழா; பகல் 12-மணி: ரெட்டிபட்டி—துவக்கப் பள்ளி அடிக்கல் நாட்டு விழா; மாலை 4-மணி: ஆட்டையாம்பட்டி; 5-30 மணி: மல்லூர்; 7-30 மணி: உடையாபட்டி.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை,13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.